# Tree Plantation with Rotaract Club of Bharathidasan University, Trichy - 2022

**Organiser: Rotaract Club & Dr. M. SELVAM**

**Dinamani, Tiruchirappalli Edition, Dated:17.05.2022, Page No:2**

## 'தனி நபர் மாற்றத்தால் மட்டுமே குப்பைக் கழிவு மேலாண்மை சாத்தியம்'



நிகழ்வில் மரக்கன்று நடுகிறார் பல்கலை. துணைவேந்தர் ம. செல்வம். உடன், பேராசிரியர்கள், ரோட்டரி நிர்வாகிகள்.

திருச்சி, மே16: தனி நபர் மாற்றத்தால் மட்டுமே குப்பைக் கழிவுகளை சிறப்பாக கையாள்வது சாத்தியமாகும் என மரம் நடும் விழாவில் அறிவுறுத்தப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் ரோட்டரி சங்கம் சார்பில் சுதந்திரத் திருநாளின் 75ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்தை முன்னிட்டு திங்கள்கிழமை நடைபெற்ற மரக்கன்றுகள் நடும் விழாவுக்கு பல்கலைக் கழகத் துணைவேந்தர் ம. செல்வம் தலைமை வகித்து சுற்றுச்சூழலைப் பேணிக் காப்பதன் அவசியத்தை விளக்கினார்.

விழாவில் திருச்சி ரோட்டரி சங்க நிர்வாகியும், சுற்றுச் சூழல் அமைப்பின் தெற்காசிய உறுப்பினருமான இ. அசோக்ராஜா பேசியது:

அன்றாடம் நாம் உண்ணும் உணவுப் பொருள்களிலும், தண்ணீரிலும் எண்ணற்ற மைக்ரோ பிளாஸ்டிக் கலந்துள்ளது. இது கேன்சர் போன்ற நோய்களைத் தீவிரப்படுத்த வகை செய்கிறது.

உலக நாடுகள் கழிவு மேலாண்மையில் தீவிர முயற்சியில் ஈடுபடும் நிலையில், இந்தியாவும் அதில் ஈடுபடுகிறது. சுற்றுச்சூழல் மாசுபாடு, பிளாஸ்டிக் கழிவுகள் அதிகரிப்பு தொடர்ந்தால் இன்னும் ஆறு தலைமுறைகளுக்குள் இந்த உலகம் வாழத் தகுதியற்றதாக உருவாகும். தனிநபர் முயன்றால் மட்டுமே கழிவு மேலாண்மையை சரிசெய்யலாம்.

ஒவ்வொருவரும் தங்களது வீடு மற்றும் அலுவலகத்தில் குப்பைக் கழிவு மேலாண்மையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். தனிநபரிடமிருந்து மாற்றம் தொடங்கினால் மட்டுமே வீட்டிலும், நாட்டிலும் மாற்றம் வரும் என்றார்.

பின்னர், நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர்களுக்கு கோணி ஊசி கொடுத்து பிளாஸ்டிக் கழிவு மாலை சவால் என்னும் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

மாணவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் வீட்டில் சேகரமாகும் பிளாஸ்டிக் குப்பைகளை மற்ற கழிவுகளுடன் சேர்த்து குப்பையில் போடுவதற்குப் பதிலாக கோணி ஊசி நூலில் அவற்றைக் குத்தி சேமித்து கழிவு எடுக்க வரும் சுகாதார பணியாளர்களிடம் தனியாக கொடுத்து அதை புகைப்படம் எடுத்து சமூக வலைதளத்தில் பதிவிட்டு, பிறரையும் இந்த சவால் பங்கேற்பில் இணைக்க வேண்டும் என்றார் அவர்.

விழாவில் மரக்கன்றுகள் நடப்பட்டன. பல்கலைக் கழகப் பதிவாளர் எல். கணேசன், வளாக பராமரிப்புத் துறை அலுவலர் அலெக்சாண்டர், வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறைத் தலைவர் மு. செல்வம், திருச்சி ரோட்டரி சங்கத் தலைவர் ராஜேந்திரன், ரோட்ராக்ட் சங்கத் தலைவர் மாதேஷ், செயலர் காயத்ரி மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள், பேராசிரியர்கள், மாணவர், மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

**Maalaimalar, Tiruchirappalli Editio Dated:24.02.2022, Page No:8**

### திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக

## வணிகவியல் துறையில் ரோட்ராக்ட் சங்கம்-சாசன தொடக்க விழா

### மார்ச் 3-ந்தேதி நடக்கிறது

திருச்சி, பிப்.24-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக ரோட்ராக்ட் சங்கம் சார்பில் வணிகவியல் மற்றும் நிதியியல் துறையில் ரோட்ராக்ட் சங்கம் தொடக்க விழா வருகிற 3.3.2022 (வியாழக்கிழமை) காலை 10.30 மணிக்கு பல்கலைக்கழக கருத்தரங்க அறையில் நடைபெறுகிறது.

விழாவுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் எம்.செல்வம் தலைமை தாங்குகிறார். ரோட்டரி 3000-ன் முன்னாள் ஆளுனர் டாக்டர் ஏ.ஜமீர்பாட்சா சிறப்பு விருந்தினராக கலந்துகொள்கிறார்.

சிறப்பு விருந்தினரை மாவட்ட ரோட்ராக்ட் சேர்மன் எல்.ராமநாதன், மாவட்ட ரோட்ராக்ட் சங்க பிரதிநிதி சுரேஷ் சர்மா ஆகியோர் கவுரவிக்கிறார்கள்.

ரோட்டரி 3000-ன் உதவி ஆளுனர் எஸ்.சுரேஷ் குமார், ரோட்ராக்ட் பிரதிநிதி (தேர்வு) டி.மணிகண்டன், ரோட்டரி கிளப் ஆப் திருச்சிராப்பள்ளி இளைஞர் சேவை தலைவர் லியோ ஜியோ லூர்துராஜ், ரோட்டரி பப்ளிக் இமேஜ் மற்றும் உறுப்பினர் சேர்க்கை சேர்மன் கே.சீனிவாசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

விழாவுக்கான ஏற்பாடுகளை தலைவர் வி.ராஜேந்திரன், செயலாளர் ஆர்.செல்வராஜ், பொருளாளர் கே.சுரேஷ் குமார், சாசன செயலாளர் வி.காயத்ரி, சாசன தலைவர் எஸ்.குணசேகரன், பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் துறை தலைவர் எம்.செல்வம் ஆகியோர் சிறப்பாக செய்து வருகிறார்கள்.